"Rupee a Measure" Scheme

* 127 *Q.*—THIRU N. R. THIAGARAJAN: Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state whether the news item in the "Madras Information" for June 1968, which states that the Hon. the Minister for Public Works (Present Chief Minister) in an interview with the correspondent of the *Manchester Guardian* had said that rice is sold at one rupee a measure at Madras, Coimbatore and Madurai, is correct?

"ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி" திட்டம்

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு உணவு-வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

"மெட்ராஸ் இன்பர்மேஷன், ஜூன் 1968" இதழில் சென்னை, கோவை, மதுரை ஆகிய இடங்களில் ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி போடப் படுவதாக பொதுப்பணி அமைச்சர் (தற்போதைய முதல் அமைச்சர்) மான்செஸ்டர் கார்டியன் நிருபரிடம் கூறியதாக வந்த செய்தி சரியா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: பொதுப்பணி அமைச்சர் மதுரையிலும் "ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி" போடப்படுவதாக கூறவில்லை. மான்செஸ்டர் கார்டியன் நிருபர் "சென்னை, மதுரை, கோவை முதலிய இடங்களில் மட்டும் ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி திட்டத்தை அமுலாக்கிவிட்டு, மற்ற இடங்களில் விரிவு படுத்தப்படாமலிருந்தால், ஏனைய மக்களுக்கு அதிருப்தி ஏற்படாதா?" என்று கேட்ட கேள்விக்கு பொதுப் பணி அமைச்சர் பதிலளிக்கையில் இந்தப் பிரச்னையை அக்கோணத்திலிருந்து நோக்கக்கூடாது என்றும், சென்னை, மதுரை, கோவையிலுள்ள மக்கள் பெரும்பாலோர் தினசரித் தேவைக்கான அரிசிக்கு வெளி மார்க்கட்டையே நம்பியிருப்பதால், அவர்கள் இம்மாதிரியான சில சலுகைகளுக்கு உரியவர்கள் என்றும், மற்ற இடங்களில் அரிசியின் விலை குறைந்து வருகிறது என்றும், அரிசியும் நிறையக் கிடைக்கிறது என்றும் கூறியதாகத்தான் "மெட்ராஸ் இன்பர்மேஷனில்" வெளியிடப்பட்டுள்ளது. பொதுப் பணி அமைச்சர் மதுரை மக்கள் படியரிசித் திட்டம் போன்ற சலுகைகளுக்கு உரியவர்கள் என்று தான் கூறியுள்ளாரே தவிர, அங்கு ரூபாய்க்கு படி அரிசி வழங்கப்படுவதாக குறிப்பிட்டுக் கூறவில்லை.

திரு. என். ஆர். தியாகராஜன்: தலைவர் அவர்களே, முன்பு அப்படிக் குறிப்பிடாமல் இருந்து அது பத்திரிகையில் வந்திருந்தாலும் இனிமேலாவது அப்படிப் போடுவதற்கு முயற்சி செய்வார்களா? எப்போதிருந்து போடப்படும்?

Illicit transport of cholam

* 128 *Q.*—THIRU N. R. THIAGARAJAN: Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state—

(*a*) whether it was alleged at the meeting of the North Arcot District Development Council held in November 1968, that 5,000 bags of Cholam were illicitly transported ; and

(*b*) if so, the action taken thereon?